e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

வழங்கும்

விருப்ப சந்தா




e-magazine

e-magazine

# 2022 ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# யார் இந்த
# ராகு - கேது
## அசுர குலத்தை சேர்ந்தவர்கள் தேவர்களான வரலாறு

அமிர்தம் பெறுவதற்காக பாற்கடல் கடையப்பட்டது. தேவர்களும், அசுரர்களும் சேர்ந்துபாற் கடலைக் கடைந்தனர். அப்போது சில பொருட்கள் கடலுக்குள் இருந்து வெளிப்பட்டன.

அதில் காமதேனு என்ற பசு, உச்சைசிரவஸ்என்ற வெள்ளைக் குதிரை, ஐராவதம் என்ற யானை மற்றும் கற்பக விருட்சத்தை தேவர்களின் தலைவனான தேவேந்திரன் எடுத்துக் கொண்டான்.

அப்சரஸ்திரிகளை அசுரர்கள் ஏற்றுக்கொண்டனர். அகலிகை என்ற அழகான பதுமையை பிரம்மன் தனது வளர்ப்பு மகளாக எடுத்துக் கொண்டார். பின்னாளில் அவளை கவுதம முனிவர் மணம் முடித்தார். திருமகள் என்ற லட்சுமி தேவியை, மகாவிஷ்ணு தன் மார்பில் அமர்த்திக் கொண்டார்.




இறுதியாக அமிர்த கலசத்துடன் வெளிவந்த தன்வந்திரி பகவானிடம் இருந்து, அசுரர்கள் அமிர்த கலசத்தை பறித்துச் சென்றனர். அமிர்தத்தை யார் முதலில் அருந்துவது என்பதில் அசுரர்களுக்குள்ளேயே கலவரம் மூண்டது. இதில் அமிர்தம் யாருக்கும் கிடைக்காமல் வீணாகிவிடும் நிலை உருவானது. இதனால் தேவர்கள் பெரும் கவலை அடைந்தனர்.

அவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று, அமிர் தத்தைக் காத்து அருளும்படி வேண்டினர். தேவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட விஷ்ணு, மோகினிஅவ தாரம் எடுத்து அசுரர்களிடம் சென் றார். மோகினி உருவத்தில் இருந்த மகா விஷ்ணு, 'நான் அமிர்தத்தை தேவர்களுக்கும் உங்களுக்கும் சரிபாதியாக பங்கிட்டு தருகிறேன்' என்று அசுரர்களிடம் கூறினார். மோகினியின் அழகில் மயங்கிய அசுரர்கள் அமிர்த கலசத்தை அவளிடம் கொடுத்தனர்.

அமிர்த கலசத்தை வாங்கிய மோகினி, தேவர்களையும் அசுரர்களையும் இரு வரிசைகளாக நிற்கச் சொன்னாள். பின்னர், 'முதலில் எந்த வரிசைக்குக்

கொடுக்கட்டும். இல்லை ஒருவர் மாற்றி ஒருவராக தரட்டுமா?' என்றாள்.

அசுரர்கள் அமிர்த கலசத்தின் அடிப்பாகத்தில்உள்ள அமிர்தத்தை தங்களுக்கும், தெளிந்த மேல் பகுதியில் இருப்பதை தேவர்களுக்கும் அளிக்கலாம் என்றனர்.

அதன்படி தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கத் தொடங்கினாள் மோகினி. அளவுக்கு அதிகமாகவே தேவர்களுக்கு வழங்கப்பட்டது. மோகினியின் சூழ்ச்சியை உணர்ந்த சுவர்பானு என்ற அசுரன், தேவர்களைப் போல உருவத்தை மாற்றிக்கொண்டு, தேவர்களின் வரிசையில் போய் நின்றான். அவனைக் கவனிக்காத மோகினி, சுவர்பானுவுக்கும் அமிர்தத்தை வழங்கினாள்.

அமிர்தம் கிடைத்தவுடன் அதை உடனடியாக பருகிவிட்டான் சுவர்பானு. தான் அமிர்தம் உண்டதை யாரும் அறியவில்லை என்று சுவர்பானு கருதினான். ஆனால் அவனைக் கவனித்த சூரியனும் சந்திரனும் அவன் ஒரு அசுரன் என்பதை மோகினிக்கு உணர்த்தினர்.





இதையறிந்த மோகினி, அமிர்தம் வழங்குவதற்காகவைத்திருந்த அகப் பையைக் கொண்டு சுவர்பானுவின் தலையை துண்டித்தாள். உடல் வேறு, தலை வேறாக பிரிந்தாலும், அமிர்தம் உண்ட காரணத்தால் சுவர்பானுவுக்கு மரணம் சம்பவிக்கவில்லை. மேலும் துண்டான தலைக்கு பாம்பின் உடலும், உடலுக்கு 5 பாம்பின் தலையும் முளைத்தன.

அசுரர்களுக்கு அமிர்தத்தை வழங்காமல் இருக்க என்ன செய்யலாம் என்று ஆலோ சித்துக் கொண்டிருந்த மோகினிக்கு, சுவர்பானு உருமாறி வந்த காரணம் கிடைத்து விட்டது. அதைச் சுட்டிக் காட்டி அசுரர்களுக்கு அமிர்தம் வழங்க மறுத்து விட்டாள்.

இதனால் சுவர்பானுவின் மீது கோபம் கொண்ட அசுரர்கள், சுவர்பானுவை தங்களின் கூட்டத்தோடு சேர்த்துக் கொள்ளவில்லை. மாறு பட்ட உடல் அமைப்பைக் கொண்ட அவனை, தேவர்களும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். இதனால் மிகவும் வருத்தம் அடைந்த சுவர்பானு, பிரம்ம தேவரை தஞ்சம் அடைந்தான். தனக்கு பழைய உடல் உரு வைத் தரும்படி பிரம்மனிடம் வேண்டினான்.

பிரம்மதேவரோ, 'நாராயணரால் தண்டிக்கப்பட்ட உன்னை, பழைய நிலைக்கு மாற்றுவது என்பது இயலாது. எனவே இரு வேறு உடல் பிரிவுகளைக் கொண்டவனாக இருப்பாய். மனிததலையும் பாம்பு உடலும் கொண்ட உடல் அமைப்பிற்கு 'ராகு' என்றும், மனித உடலும், பாம்பின் தலையும் கொண்ட அமைப்புக்கு 'கேது' என்றும் பெயர் அமையும்' என்றார் பிரம்மதேவர்.

இதையடுத்து பிரம்மனிடம் மேலும் சில வேண் டுதலை வைத்தான் சுவர்பானு. 'சூரியனும் சந்திர னும் காட்டிக் கொடுத்ததால் தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது. எனவே அவர்களைப் பழி வாங்குவதற்கு அருள்புரிய வேண்டும்' என்றான் சுவர்பானு. பிரம்மதேவர் எவ்வளவு எடுத்துரைத்தும் அவன் சமாதானம் அடையவில்லை. இதையடுத்து 'நவக்கிரக பரிபாலனத்தில் இணையும்போது, சூரியன் மற்றும் சந்திரன் ஒளிகளை அடக்கி அவர்களுக்கு கிரகண தோஷத்தை ஏற்படுத்து வீர்கள். மேலும் நீங்கள் இருவரும் மற்ற கிரகங் களைப் போல் முன்னோக்கிச் செல்லாமல், பின் னோக்கி சஞ்சாரம் செய்வீர்கள்' என்று பிரம்மன் அருள்புரிந்தார்.

அப்போது ராகுகேதுவின் முன்பாக மகா விஷ்ணு தோன்றினார். அவர் பிரம்மனிடம், 'ராகுவையும், கேதுவையும் உடனடியாக நவக் கிரக பரிபாலனத்தில் ஈடுபடுத்தக் கூடாது. அசுரர்களின் ஆட்சி நடக்கும் காலத்தில் அசுரன் ஒருவனை அப்படி ஈடுபடுத்துவது சரிவராது. அது அசுரர்களின் பலத்தை அதிகரிக்கும். கடைசி அசுரனான ராவணன் அழியும் வரை, கேது கடக ராசியில் அமர்ந்து ரிக், யஜுர், சாம வேதங்களையும், ராகு மகர ராசியில் இருந்து அதர்வண வேதத்தையும் உரியவர்கள் மூலமாக கற்றுணர்ந்து கொள்ளட்டும். ராவணன் அழிவுக்குப் பிறகு, ஞானம் பெற்ற ராகு ஞானகாரகனாகவும், கேது மோட்சகாரகனாகவும் செயல்பட்டு பூமியில் தோன்றிய உயிர்களுக்கு ஞானம் மற்றும் மோட்சத்தை பெற அனுக்கிரகம் செய்யட்டும்' என்றார்.

அதன்படியே ராவணன் அழிக்கப்பட்ட பின் னர், கேதுவும் ராகுவும் நவக்கிரகங் களில் கிரக அந்தஸ்து பெற்று சஞ்சாரம் செய்யத் தொடங்கி னார்கள் என்பது புராண வரலாறு.



இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்





















# 2022 ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்



www.aanmeegamalar.com

ராகு கேது என்றாலே எல்லோருக்கும் பயம்தான். ஜாதகத்தில் எவ்விடத்தில் இருந்தாலும் அந்த வீட்டின் முழு உரிமையையும் எடுத்துக்கொள்வார். ஒரு ஜாதகத்தில் 3,6,10,11ஆம் இடம் என்னும் உபஜெய ஸ்தானத்தில் ராகு இருந்தால் நற் பலனையே தருவார்.

இவர் நல்லது கெட்டது என எதை செய்தாலும், அவை எல்லாவற்றையும் அனுபவித்த ஜாதகர்கள், மேலான ஞான அறிவையும் பெறுவார்கள்.

இந்த ராகு பகவானுக்குரிய ஒருசில தொழில்கள் உள்ளன, அவை...

சாப்ட்வேர், ஆன்லைன் சம்பந்தமான வேலை கள், வெளிநாட்டு வேலை, தகவல் அந்நிய சகவாசம், வேற்று மொழி பேசுவதனால் சம் பாதிப்பது, மாந்திரீகம், செய்வினை செய்வது, கலப்படம் செய்யும் தொழில், இருதய சிகிச்சை நிபுணர், துப் புரவு, சர்வாதிகாரம் செய்வது, குலம், ஜாதிக்கு விரோதமான தொழில், மூங்கில் வியாபாரம் போன்றவை ராகு பகவான் தொழில்கள்.

2022 மார்ச் மாதம் 21ம் தேதி அன்று ஸ்ரீ ராகு பகவான் மேஷ ராசிக்கும், ஸ்ரீ கேதுபகவான் துலாம் ராசிக்கும் செல்கிறார்கள். இவ்விருகிரக மாற்றங்களால் 12 ராசிகளுக்கும் கிடைக்கப்

போகும் பொதுப்பலன்களை பார்ப்பாம்.

பலன்கள் எப்படி இருந்தாலும் இறைவழி பாடுடன் கிரக வழிபாடு மிக அவசியம்.

தமிழ் பிலவ வருசம் பங்குனி மாதம் 07–ஆம் நாள் திங்கள்கிழமை. சதுர்த்தி திதியில், சுவாதி நட்சத்திரத்தில் பகல் மணி 02.21க்கு கிருத்திகை நட்சத்திரம் 01–ஆம் பதத்தில் மேசராசிக்கு வருகிறார்.

கேது விசாகம் 03–இல் துலாம் ராசியில் வருகிறார்.

இவர்களில் ராகுவிற்கு விருப்பமானவற்றை பார்ப்போம்.

| | |
|---|---|
| ராகு தான்யம் | உளுந்து, |
| உலோகம் | கருங்கல், |
| சுவை | புளிப்பு, |
| வாகனம் | ஆடு, |
| வஸ்திரம் | கருப்பு, |
| தேவதை | பத்திரகாளி, |
| ஆசனம் | கொடி, |
| உருவம் | அலி, |
| மலர் | மந்தாரை, |

கோவில் திருநாகேஸ்வரம். காளகஸ்தி, சூரிய னார் கோவில்.

இவர் அசுர பெண்ணின் கர்ப்பத்தில் பிறந்த வர். ஒவ்வொரு ராசியிலும் ஒன்னரை ஆண்டு இருப்பார்.

புதன், சுக்கிரன், சனி நண்பர்களாகவும்மற்ற கிரகங்கள் பாவர்களாகவும் இருப்பார்கள். இவர் உடம்பில் எலும்பாக இருப்பார், இவர் பாற் கடலில் கிடைத்த அமுதத்தை சூரியனுக்கும், சந்திரனுக் கும் இடையே அமர்ந்து கொண்டு, அமுதுன்ன மோகினி அவதாரம் எடுத்த பெருமாள் கோபம் கொண்டு ரகுவின் தலையை தன் சக்கரம் கொண்டு சீவினார்.

அப்போது தலை தனியே, உடல் தனியே, விழுந்தார் அமுதத்தை அருந்தியதால் சாகாவரம் பெற்ற ராகு பின் விஷ்ணுவை தவம் செய்து நவ கிரகங்களில் பதவி அடைந்தார். அப்பேர்பட்ட ராகு மற்ற கிரகங்கள் வலதுபுறமாக வலம் வரும் பொழுது இவர் இடதுபுறமாக வலம் வருவார்.

இவருக்கு சாயா கிரகம் என்ற பெயரும் உண்டு. சாயா கிரகம் என்றால் கண்களுக்கு புலப்படாத என்று அர்த்தம், இவர்களுக்கு வக்கிரம் என்பதே கிடையாது இந்த ஆண்டு நட்சத்திர பாத பெயர்ச்சி விவரம்

வைகாசி 09–இல் பரணி 04–இல் இருப்பார் கேது விசாகம் 2–இல் இருப்பார் ஆடி 09–இல் பரணி 03–இல் கேது விசாகம் 01–இல் புரட்டாசி 09–இல் பரணி 2–இல் கேது சுவாதி 04–இல் கார்த்திகை 11–இல் பரணி 01–இல் கேது சுவாதி 3–இல் தை 15–இல் அசுவனி 04–இல் கேது சுவாதி 02–இல் பங்குனி 19–இல் அசுவணி 03–இல் கேது சுவாதி 01–இல் இவ்வாறாக மேச ராசியில் இருப்பார்கள்.

இவர்களின் இந்த ஆண்டுக்கான 12 ராசி யின் பலன்களைப் பார்ப்போம்.

கேது பகவான் சிவப்பு நிறம் உடையவர் இவர் துலாம் ராசியில் நட்பு பெற்று இருக்கிறார் இவர் கல்வி அறிவு ஆன்மிகம் என அனைத்திலும் சிறப்பாக விளங்குவார் மோகினி அவதாரமான பெருமாள் ராகுவை வெட்டியதில் தலை கையோடு இருப்பது ராகு அதற்கும் கீழ் பகுதி கேதுபகவான் எப்பொழுதும் ராகு பெயர்ச்சி என்றால் கேது பெயர்ச்சி தானாகவே இயற்கையாகவே வருவதற்கு இதுதான் காரணம்.

கேதுவின் உருவம் அலி இவருடைய வடிவம் நெடியர் இவருடைய பாஷை அன்னிய பாஷை இவருடைய நிறம் சிவப்பு இவருடைய ஜாதி சங்கிரம ஜாதி இவருடைய குணம் குரூர குணம் இவ்வாறு நவகிரகத்தில் இருக்கிறார் இவருடைய வாகனம் சிங்கம், இவருடைய சுவை புளிப்பு இவருடைய உலோகம் துருக்கல் இவரின் தேவதை இந்திரன் ஆகவும் இவருக்குப் வஸ்திரம் பல வர்ணங்களில் இருக்கும்.

இவருடைய சேத்திரம் காளகஸ்தி இவருடைய ஆசனம் முச்சில் ஆசனம் என்று விளங்கு கிறது. இப்பேர்ப்பட்ட கேது பகவானின் பலன்களைப் பற்றியும் ராகுவின் பலன்களைப் பற்றியும் இப் பொழுது பார்ப்போம். மேஷ ராசியில் ராகு பகவான் செவ்வாயின் வீட்டில் சூரியனுடைய நட்சத்திரத்தில் இருப்பதால் பாட்டனார் வழி சொத் துக்கள் விரயம் அந்த தகப்பனாருக்கு உள்ள வைத்தியம் தகப்பனார் வழி உறவுகளில் மாரகம் என சில துன்பங்களை கொடுக்கக் கூடியவர் இவர் சுப கிரகங்களாக விளங்கக்கூடிய குரு பார்வை உள்ளவர்கள்.

சற்று இந்த வீரியம் குறைவாகவே இருக்கும் பாவ கிரகங்கள் ராகுவை பார்த்தால் 12 ராசிக் கும் விரைய செலவுகள் இல் லாமல் இருக்க காளஹஸ்தி, திருநாகேஸ்வரம் போன்ற ஸ்தலங் களில் சென்று பாலபிஷேகம் செய்து ராகு கேதுவை வணங்கினால். ராகு கேதுவின் மந்தி ரங்களை ஜெபம் செய் தால் வீண் விரயங்கள் தவிர்க்கப்படும். சிவன் கோவிலில் உள்ள நவகிரகங்களை வணங்கினால் போதும்.




# ராகு-கேது சிறப்பு தகவல்கள்

“கால சர்ப்பயோகம் கொண்ட ஜாதகர்கள், ராகு காயத்திரியையும் கேது காயத்திரியையும் ஆயுள் முடியுமட்டும் தினமும் தங்களால் முடிந்த அளவு ஜபித்துக் கொண்டே வருவது மிகச் சிறந்த பரிகாரம்.

ஜோதிட சாஸ்திரத்தில் நிழற்கிரகங்கள் என்று ராகு கேதுவை வர்ணக்கப்பட்டாலும் இவர்கள் இரண்டு பேரும் சனி பகவானின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள்.

கிரந்தங்களிலும் பல்வேறு ஓலை சுவடிகளிலும் ராகுகேதுவின் பெருமைகளைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொரு ராசிகளில் சஞ் சரிக்கும்போது என்ன என்ன செய்வார்கள் என்பதைப் பற்றி நிறைய செய்திகள் உள்ளன.

ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து 1, 5, 9 இந்த ஸ்தானங்களில் சனி, ராகு, கேது, போன்ற கிரகங்கள் இருக்கும் பொழுது அது நாகதோஷம் உடைய ஜாதகமாகிறது.

நாக தோஷம் உடையவர்களுக்கு உடலில் ஏதோ ஒரு இடத்தில் நாகம் போன்ற உருவம் கொண்ட மச்சமோ, அல்லது தழும்போ இருக்கும் என்று சொல்வதில் உண்மை இல்லை.

ஜாதகத்திலே நாக தோஷம் இருப்பவர்களுக்கு நான்கு, பதி மூன்று, இருபத்தி இரண்டு, முப்பத்தி ஒன்று, இந்த தேதியில் பிறந்தவர்களுக்கும், அல்லது பெயரின் கூட்டு எண் நான்கு வந்தாலும், இவர்களுடைய கண்களுக்கு பாம்புகள் அடிக்கடி தென்படும்.

நாக தோஷங்கள் எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் முன் ஜென்மத்தில் ஆண் நாகமும், பெண் நாகமும் ஒன்றாக இணைந்து இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால், இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் ராகு என்ற கருநாகம் நின்று கணவனுக்கு தோஷத்தை ஏற்படுத்தும்.




பாம்பு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்திலும், அல்லது தனது குட்டிகளுடன் ஒன்றாக இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஐந்தாம் இடமான புத்திர ஸ்தானத்தில், ராகுவோ, கேதுவோ நின்று நாக தோஷத்தை ஏற்படுத்தும்.

புராண காலங்களில் நாகதோஷம் எதற்காக பார்க்கப்பட்டது என்றால், ஒருவர் சன்னியாசம் பெற்று காடுகளிலும், மலைகளிலும், கடுமையான தவங்கள் செய்வதற்கு கடுமையான விஷ ஜந்துகளினால் இவருக்கு ஆபத்து ஏற்படுமா என்பதை அறிந்த பின்னரே அவருக்கு சன்னியாசம் கொடுக்கப்பட்டது. நாக தோஷம் இதற்காகத்தான் பார்க்கப்பட்டது. நாளடைவில் அது ஒரு பயப்படக் கூடிய தோஷமாக பார்க்கப்பட்டது.

கும்ப கோணத்தில் இருக்கும் திருநாகேஸ்வரம், ஆந்திர மாநிலத்தில் திருப்பதிக்கு அருகில் உள்ள திருகாளகஸ்தி, சென்னை அருகில் உள்ள கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு, சென்று வணங்கி வருவது நாக தோஷங்களை நீக்கும் பரிகாரமாகும்.

ஒவ்வொரு மாதமும் திரியோதசி திதியன்று, சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. பிரதோஷ வேளையில் மாலை 4.30 மணியில் இருந்து 6 மணிக்குள் இவ்வழிபாடு நடைபெறும். ராகு கேதுவால் ஏற்படும் நாக தோஷத்தை போக்க இது சிறந்த வழிபாடாகும்.

சர்ப்ப பரிகாரங்கள் செய்யும்போது மிகுந்த ஆசாரத்துடன் செய்ய வேண்டும். சைவ உணவு விரதம் மேற்கொள்ள வேண்டும். தான தர்மங்களை மனம் கோணாமல், மனமுவந்து நம்மால் முடிந்த அளவு செய்ய வேண்டும்.

நாகப் பிரதிஷ்டம் என்பது ஆண் பாம்பும் பெண் பாம்பும், நாகப்பாம்பும், சாரைப் பாம்பும் இணைவது போன்று கல்லில் வடித்து அரசும், வேம்பும் சேர்ந்திருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்தால் விசேஷம் என்று மனுநீதி என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் கோமதி அம்மன் ஆலயம் உள்ளது. நாக தோஷம் உள்ளவர்கள் இந்தக் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை அன்று வந்து பாம்பு புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபடுகின்றனர்.
இவ்வாறு 11 வாரம் தொடர்ந்து புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபட்டு வந்தால் நாக தோஷத்தால் தடைப்பட்டு வரும் திருமணம் விரையில் நடைபெறும்.

ராமேஸ்வரம் சென்று மூன்று நாள் தங்கி கடலில் நீராடி ராமலிங்க சுவாமியை வணங்கி வந்தால் சர்ப்ப தோஷம் பரிகாரமடைந்து புத்திரர் பிறப்பார்கள்.

தங்கம் அல்லது வெள்ளி சிறு ஐந்து தலை நாகம் செய்து வீட்டில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகம் செய்து, பூசித்து பிறகு ஒருவருக்கு புது வேட்டி துண்டு தாம்பூலம் தட்சணையுடன் நாக விக்கிரகத்தையும் தானம் செய்யலாம்.

கருங்கல்லில் நாகப் பிரதிஷ்டை செய்து ஆறு, குளம் அருகில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகத்துடன் பூசித்து தினமும் 108 முறை வலம் வந்தால் நாக தோஷம் நிவர்த்தியாகும்.

இரண்டு நாகங்கள் பின்னிக் கொண்டு ஒன்றின் முகத்தை ஒன்று பார்க்குமாறு கல்லில் வடித்து அரசமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள்கள் விளக்கேற்றி வைத்து பூசித்தால் நாகதோஷம் விலகும்.

கண்ணன் நடனமாடுவது போலவும், அவனுக்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போலவும் கல்லில் வடித்து வேம்பும் அரசும் இணைந்திருக்கும் குளக்கரையில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள் விளக்கேற்றி வலம் வந்து வணங்கினால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

சிவலிங்கத்திற்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போல் சிலை வடித்து நதிக்கரை அல்லது, குளக்கரையில் பிரதிஷ்டை செய்து, நாற்பது நாள் பூசித்து வலம் வந்தால் நாகதோஷம் பரிகாரமாகும்.

குளம் அல்லது நதிக்கரையில் அரசு, வேம்பு கன்றுகளை நட்டு, முறையாகத் திருமணம் செய்து குறைந்தது நூறு தம்பதிகளுக்கு விருந்தும் தட்சணை தாம்பூலம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகி புத்திரர்கள் பிறப்பதுடன் வாழ்க்கையும் இன்பமாக அமையும்.

வசதி உள்ளவர்கள் ஓர் ஏழைக்கு பயிர் நிலம் வாங்கி தானம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

ராகு காலத்தில் பாம்புப் புற்றுக்கு முட்டை, பால் வைத்து வழிபாடு செய்வது நற்பலன்களை உண்டாக்கும்.

கோமேதகக் கல் வைத்த மோதிரம் அணியலாம். இதனால் ராகுவினால் உண்டாகும் அசுப பலன்கள் குறையும்.

ராகு பகவானுக்கு உளுந்து வடை விசேஷமாகும். அதை நெய்வேத்தியம் செய்து தானம் செய்யலாம். கருப்பாக உள்ளவரிடம் நான்கு வடைகள் கொடுத்து சாப்பிடச் சொல்வது நல்லது.

ராகு, கேதுகளினால் தோஷம் ஏற்பட்டு பருவமடைந் தும் நீண்ட காலம் திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்கள் அரச மரமும், வேப்ப மரமும் சேர்ந்துள்ள இடத்தின் கீழுள்ள நாக சிலைக்கு பால் விட்டு, அபிஷேகம் செய்து வர வேண்டும். செவ்வாய்க் கிழமையில் செய்வதே நல்லது. இவ்வாறு 48 நாட்கள் செய்ய வேண்டும்.

பாம்பு புற்றுக்கு பால் வார்த்தும் முட்டை வைத்தும் ஒரு மண்டலம் வழிபாடு செய்யலாம். இதனால் திருமணம் விரைவில் நடக்கக்கூடும். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கும், நாகதோஷம் நீக்கி புத்திர பாக்கியம் விரைவில் கிடைக்கும். திருமணம் விரைவில் நடக்கவும் இதுபோல் வழிபாடு செய்து வர வேண்டும்.

ராகு பகவானுக்கு உளுந்து பிரீதியான தானியம் ஆகும். இதை நவக்கிரக சன்னதியில் தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் ராகுவுக்கு வைத்து வலம் வந்து பூஜித்தால் தோஷம் நீங்கும். இதனால் சகல கஷ்டங்களும் நீங்கும்.

ராகுவுக்கு அதிதேவதை பத்ரகாளி ஆகும். எல்லா சிவாலயங்களிலும் வடக்கு பார்த்த நிலையில் துர்க்கை அம்மன் இருக்கும். அந்த அம்மனுக்கும் வெள்ளிக்கிழமை தோறும் எலுமிச்சை பழத்தோலில் விளக்கேற்றி பூஜித்து வர சகல தோஷங்களும் தீரும்.

துர்க்கா சூக்த மந்திரங்களை ஜபித்து ஹோமங்களில் அருகு, மந்தாரை போன்ற மலர்களையும், உளுந்து போன்ற கருநிற தானியங்களையும், புளிப்பு பண்டங்களையும் ஆஹூதி செய்தால் வாழ்க்கையில் பகைவர்களை நிர்மூலமாக்குகிற பராக்கிரமம் ஜாதகருக்கு ஏற்படுகிறது.

ராகு, கார்கோடன் என்ற பெயர்கொண்டு மந்தாரை மலர் சூடி கருப்பு சித்திர ஆடை அணிந்து, உளுந்து தானியம் ஏற்றி, வேம்பு எண்ணெய் தீப ஒளியில் ஸ்ரீஅனந்த பத்மேஸ்வரர் ஆலயம் (லிங்கப்பன் தெரு, ஏகாம்பரநாதர் கோவில் அருகில்) பெரிய காஞ்சீபுரத்தில் யோகங்களை வாரி வழங்குகிறார். தோஷங்களை போக்குகிறார்.

ராகு ஜாதகத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப தனித்தனி பரிகாரங்கள் இருந்தாலும் ராகு தோஷத்தால் தவிப்பவர்கள் செய்ய வேண்டிய பொதுவான பரிகார வழிபாடு வருமாறு:

தினசரி துர்க்கை அம்மனுக்குரிய ஸ்தோத்திரங்களை படித்து வர வேண்டும்.

தினசரி அரசு, வேம்பு மரத்தடியில் உள்ள விநாயகர், நாகர் சிலைகளை 9 தடவை வலம் வர வேண்டும்.

துர்க்கைக்கு அவர்கள் இருக்கும் கிரக வீட்டின் அதிபர்கள் கிழமைகளில் அர்ச்சனை செய்ய வேண்டும்.

நவக்கிரக பீடத்தில் உள்ள ராகு பகவானை தினசரி வலம் வர வேண்டும். பிரச்சனையின் தீவிரத்திற்கு ஏற்ப 9, 27, 108 என சுற்றுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து இவ்வாறு 48 நாட்கள் வலம் வர தோஷங்கள் யாவும் நீங்கும்.

ராகு பகவானுக்குரிய தியான மற்றும் காயத்ரி அஷ்டோத்திர மந்திரங்களை தினமும் ஒரு முறையாவது சொல்லி வர வேண்டும்.

கேது பகவானுக்கு பரிகாரமாக ராமேஸ்வரம் சென்று சாந்தி செய்வது உத்தமம். காஞ்சியில் உள்ள சித்ரகுப்தன் கோவில் சென்று வழிபாடு செய்வது உத்தமம்.

வெள்ளியில் ஐந்து சிரசு நாகர் வைத்து பூஜை வழிபாடு செய்வது உத்தம பலன்கள் உண்டாகும்.

கேது பகவானுக்கு அதிதேவதை விநாயகர், முதற்கடவுளான விநாயக பெருமானை ஞாயிறு அன்று தவறாமல் வழிபாடு செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் இருக்கிறது நாகர்கோவில். இங்குள்ள நாகர் ஸ்தலத்தில் நாக வழிபாடு செய்வது என்பது மிகவும் சிறப்பு. பலரும் சென்று வழிபட்டு பலன் அடைகிறார்கள்.

அரச மரத்தடியில் நாகர் சிலையை வழிபட்டு, நாகருக்கு பால் ஊற்றி, மரத்தை சுற்றிவரும் பெண்கள் தங்கள் மணாளனுடன் ஒருமித்து வாழவும், மகப்பேறு பெற்று சக்தியின் கருணையையும், அருளையும் பெறுகிறார்கள் என்பது பலரும் அறிந்த உண்மை.

கேது பகவான் பரிகாரமாக ஷோடச கணபதி ஹோமம் செய்வது விசேஷம். மேலும் சண்டி ஹோமம் செய்வதால் கேது பகவானை திருப்திப்படுத்த முடியும்.

கேதுவுக்கு உரிய அதி தேவதையான விநாயகருக்குரிய ஸ்தோத்திரங்கள், கேது ஸ்தோத்திரங்கள் படித்துவர வேண்டும். தினமும் அரசு, வேம்பு, விநாயகர், நாகர் ஆகியோரை 9 தடவை அல்லது விநாயகர் ஆலயத்தை 9 தடவை வலம் வரலாம்.

கேது இருக்கும் கிராகாதிபர் கிழமைகளில் கேதுவுக்காவது, விநாயகருக்காவது அர்ச்சனை செய்ய வேண்டும். செவ்வாய் பகவானுக்கு செய்கின்ற பரிகாரம் கேதுவுக்கும் பொருந்தும் என்ற கருத்துண்டு.

மாத சங்கடஹர சதுர்த்தி அன்று விநாயகருக்கு அருகம்புல்லினால் அர்ச்சனை செய்து வரவும். ஞாயிறு தோறும் ஆஞ்சநேயப் பெருமானை துளசியினால் அர்ச்சித்து வரலாம்.

கேதுவுக்கு உரிய தியானம் காயத்ரி, அஷ்டோத்திர மந்திரங்களை தினமும் ஒருமுறை கூறி வரலாம்.

கேது பகவானுக்கு ராகு காலம் மற்றும் எமகண்டத்தில் விசேஷ அபிஷேகம் மற்றும் பூஜை நடத்தலாம். அப்போது 16 வகையான அபிஷேகம் மற்றும் ஹோமம் செய்தும், கொள்ளுப்பொடி, உப்பு, மிளகு கலந்த சாதத்தை நைவேத்யமாக படைத்தும், பலவண்ண வஸ்திரம் சாத்தியும், நல்லெண்ணெய் விளக்கு ஏற்றியும் வழிபட வேண்டும். கொள்ளு சாத பிரசாதத்தை கோவிலிலேயே வினியோகித்து விட வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது.

சனி, திங்கள் மற்றும் ஜென்ம நட்சத்திரத்தில் கேதுவை வழிபடுவது விசேஷம். தொழில், வியாபாரம் சிறக்கவும், வழக்கு, தம்பதியர் பிரச்சனை, மரணபயம், நரம்பு, வாயு தொடர்பான பிரச்சனைகள் நீங்கவும் கேதுவிடம் வேண்டிக் கொள்ளலாம்

பாம்பு தன்னுடைய பசிக்காக இரையை தேடி செல்லும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் தொழில் ஸ்தானமான லக்னத்துக்கு பத்தாம் இடத்தில் ராகுவோ, கேதுவோ நின்று, தொழில் ஸ்தானத்துக்கு தோஷத்தை உருவாக்கும்.



# ராகு-கேது பெயர்ச்சி சிலவரி பலன்கள்

## மேஷம்

திடீர் செலவுகள் வரும். சிலருக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை வரும். நோய் நொடிகளால் மனதில் இனம் புரியாத பயம் உண்டாகும். எந்த வேலையிலும் கவனமாகவும் விழிப்புணர்வோடும் இருப்பது அவசியம்.

## ரிஷபம்

தொழில் வகை கூட்டாளிகளுடன் இணக்கம் உண்டாகும்.சிலர் வீடு மாற்றம் ஊர் மாற்றம் செய்ய நேரிடும். கேது பெயர்ச்சியால் சில ருக்கு புது வேலை வாய்ப்பு மற்றும் தொழில் அமையும். இதுநாள் வரை தொந்தரவு செய்த நோய்பிரச்சினை நீங்கும். போட்டி பொறாமை ஒழியும்.

## மிதுனம்

ராகு லாப ஸ்தானத்திற்கு மாறுவதால் எதிர் பாராத யோகத்தையும் திடீர் பண வரவையும்கொடுப்பார். ராகு போட்டி பொறாமைகளை ஒழிப்பார்.

## கடகம்

கடன் பட்டு கலங்கி போனவர்களுக்கு இனி சிறிது சிறிதாக கடன் சுமை குறையும். குழந்தைகளுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கும். கால்களில் வலி உண்டாகும். தாயுடன் கருத்துவேறுபாடு உண்டாகும்.

## சிம்மம்

கடந்த காலங்களில் பல பிரச்சினைகளை சந்தித்த உங்களுக்கு இந்த ராகு கேது பெயர்ச் சியால் விமோசனம் கிடைக்கும். தந்தைக்கு மருத்துவ செலவுகள் உண்டாகும். தெய்வ நம் பிக்கை குறையும்.

## கன்னி

இந்த ராகு கேது பெயர்ச்சி மாற்றத் தையும் முன்னேற்றத்தையும் தரும். தம்பி, தங்கை களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கும். பயணத்தடைகள் நீங்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

## துலாம்

ராசியில் கேது வந்து அமர்கிறார். ஏழாம் வீட்டில் ராகு பயணம் செய்கிறார். களத்திரம் கூட்டு தொழில் ஸ்தானம் நண்பர்கள் ஸ்தானத்தில் ராகு அமர்வதால் கஷ்டங்கள் நீங்கி இனி தலை நிமிரலாம்.

## விருச்சிகம்

இனி பிரச்சினைகள் தீரப்போகிறது. எதிரி போட்டி பொறாமை கடன் வைத்தியசெலவு,ஆகிய ஸ்தானத்தில் ராகு வருவதால் கடன்கள் அடைப்படும் தீராத நோய் தீரும். தொழில் முயற் சிகள் கை கூடும்.

## தனுசு

இந்த ராகு கேது பெயர்ச்சி நிலையான தொழில் யோகத்தையும் வலிமையான சம்பாதித் யத்தையும் கொடுக்கும். அசையா சொத்துகள் வீடு மனை வாங்கும் யோகத்தை கொடுக்கும். குழந்தைகளுக்கு மருத்துவ செலவுகள் உண்டாகும்.

## மகரம்

உங்கள் விருப்பங்கள் இனி தடையின்றி நிறவேறும்.வீட்டுக்கு பழுது நீக்கி செப்பனிடும் செலவுகள் உண்டு. குழந்தைகளின் ஆரோக் கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். வயிறு சம்பந்தமான நோய்கள் விலகும்.

## கும்பம்

குடும்பத்தில் நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில், உத்யோகத்தில் தடைகள் நீங்கும். மாமியாருடனான கருத்து வேறுபாடுகள் நீங்கும். தெய்வ காரியங்கள் தடைப்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடுகள் உண்டாகும்.

## மீனம்

குடும்ப ராகு, எட்டாம் இட கேதுவால் திடீர் பணவருமானம் வரும் திடீர் அதிர்ஷ்டங்கள் தேடி வரும். மனோ தைரியம் உண்டாகும். பயணத்தடைகள் நீங்கும். தடைப்பட்ட தெய்வ காரியங்கள் நிறைவேறும். ராகு காலத்தில் ராகு கேதுவிற்கு அர்ச்சனை செய்யுங்கள் நல்லதே நடக்கும்.

நமது இதழில்
நீங்களும்
பங்கு பெற
விரும்புகிறீர்களா?

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு
சந்தா செலுத்த விரும்புபவர்கள்
ரூ.10 முதல் தங்கள்
வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**





# மேஷ ராசிபலன்

மேஷ ராசிக்காரர்கள் அவர்களுடைய குணாதிசயங்கள் தங்களின் குறியீடானஆட்டை ஒத்ததாக இருக்கும். அதுபோல் ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் அவர்களின் குறியீட்டை தொடர்பு படுத்தி அவர்களின் குணாதிசயங்களும் இருக்கும். ஆட்டு மந்தையில் ஆடுகள் ஒன்றோடொன்று எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும். அதுபோல தான் மேஷராசிக்காரர்கள் கலகக்காரர் களாக இருப்பார்கள். வம்பு சண்டைக்கு செல்லவில்லை என்றாலும் வந்த சண்டையை விட்டு விடமாட்டார்கள். ஆடுகளுக்கு பயம் அறியாத குணமுண்டு. அதுபோல் தான் நீங்களும் தைரிய ாலிகளாக இருப்பீர்கள். ஆடுகளுக்கு மரம் ஏற தெரியாவிட்டாலும் வீம்பாக ஏறிவிடும். அதேபோல்தான் இந்த ராசிக்காரர்களும் விவேகம் இல்லாமல் செயல்படுவார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்க மோதிரத்தில் கோமேதகம் பதித்து அணிந்து வந்தால் அவர்களுக்கு வரக்கூடிய பாதிப்புகள் விலகி நல்ல பலன்கள் வந்து சேரும். இவர்கள் ரோஸ் கலர் உடை அணிய போகக்கூடிய காரியங்கள் வெற்றிகரமாக முடியும் வியாழக் கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் கூடும்.

வடகிழக்கு திசையில் நல்ல செய்திகள் வந்து சேரும் பூர்வீக பிரச்சனைகள் நீங்கி நல்ல பலன்கள் கிடைக்கும். இவர்களுக்கு வைத்தியங்கள் தீர பாலில் நிறைய குங்குமப்பூ சேர்த்து அருந்திவர வைத்தி யம் பலிக்கும்.

இவர்கள் அதிர்ஷ்ட எண் 2 மேஷ ராசியில்பரணி நட்சத்திரக்காரர்கள் நீலக் கல் கோமேதகம் புஷ்பராகம் ஆகிய கற்களை தாமிரம் வெள்ளி மோதிரத்தில் பதித்து அவர்கள் அணிந்து வந்தால் துன்பங்கள் விலகி அதிர்ஷ்டம்



நிலையாக நிலைத்து நிற் கும். இவர்கள் வெளிர் நீல உடை அணிய, மஞ்சள் உடை அணிய மேலும் மேலும் போகக் கூடிய காரியங்கள் வெற்றி பெறும்.

இவர்களுக்கு அதிர்ஷ்டத்திற்கு கிழக்கு அதிர்ஷ்ட தினம் ஞாயிற்றுக் கிழமைகளில் துர்க்கையை வழிபாடு செய்ய செய்ய சுபபலன்கள் கூடும்.

மனக் கோளாறுகள் சீராகும் நரம்பு பிரச்சனைகள் நீங்க இவர்கள் கீரைகள் நிறைய எடுத்துக் கொள்ளலாம். இவர்களின் அதிர்ஷ்ட எண் 1 இதில் கிருத் திகை நட்சத்திரக்காரர்கள் நான்கு 4 பாதத்திற்கான பலன். இவர்கள் லேசான வர்ண உடை அணிந்து பகவான் வெங்கடாஜலபதியை சேவித்து வந்தால் அதிர்ஷ்டம் நிலைக் கும். இவர்களுக்கு நோய் விலகி சிறப்பாக வாழ பால் தேன் பருகி வந்தால் நலம் கூடும். இவர்கள் வைர மோதிரம் அணிய அதிர்ஷ்டம் நிலைக்கும். இவர்களுக்கு அதிர்ஷ்ட எண் 9

## எச்சரிக்கை பலன்கள்:

மேஷ ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ஜென்ம ராசிக்கும், ஸ்ரீ கேது பகவான் ஏழாம் இடமான கணவன் மனைவி ஸ்தானத்திற்கும் வருகிறார்கள். சுருக்கமாக சொன்னால் இவ்விருவரின் சஞ்சாரமும் தங்களுக்கு தீமை தருவதாகவே அமைந்துள்ளது. ஏற்கனவே ஏழரை ஆண்டு சனிபகவானின் ஜென்ம சனி காலத்தில் இருக்கும் தங்களுக்கு பலன்களை சொல்லித்தான் தெரியவேண்டுமா.? பலன்களை சொல்லுவதற்கு எனக்கே சோர்வாக இருக்கிறது. அனைத்திலும் சோதனை மேல் சோதனை வரும். வீடு வாகனம் கைவிட்டு போகலாம். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தோல்வி ஏற்படும். இளம் பெண்கள் காதல் வயப்படமல் இருந்தால் மானம் மிச்சமாகும். இருப்பினும் தெய்வ நம்பிக்கையும், எதிலும் பொருமையும் இருப்பின் இச்சோதனைகளை எல்லாம் கடந்து வருவீர்கள். பயம் வேண்டாம்.

ராகு ஜென்ம ராசியிலேயே வருவதால் மன சஞ்சலத்தை தருவார். யோசிக்கும் திறனை மட்டுப்படுத்துவார். ஆசைகளைத் தூண்டி தவறான பழக்கத்திற்கு ஆளாக்குவார். சில உடல் பாதிப்புக்களைத்தருவார். வாகனத்தினால் பாதிப்பும், செலவுகளையும் தருவார்.

கவனமாகச் செயல்படவும். வாக்கு தவறுதல், பகை ஏற்படும். கூட்டு தொழிலில் பிரச்சனை, கடன் ஏற்பட வாய்ப்புள்ளது. திருமணத்தடை, கணவன் மனைவி பிரிவு மற்றும் சண்டை சச்சரவு, மாணவர்களுக்கு கவனச்சிதறல் ஏற்படும். கல்வியில் தடை, தீய நட்பு ஏற்பட வாய்ப்புள்ளது.


## ராகுகேது பெயர்ச்சி எச்சரிக்கை பலன் எழுதியவர்



ஜோதிடரத்னா ஆன்மிகசெம்மல் சௌமியன்
**சித்தர் மகன். Dr.L.சீனிவாசன்**
MA., D.A., S.M.P.,

## ராகுகேது பெயர்ச்சி பொதுவா பலன் எழுதியவர்



ஜோதிட வித்தகர்
**V.S.அருள்மொழிதேவன்**
M.com





# ரிஷப ராசிபலன்

ரிஷப ராசியின் குறியீடாக மாடு உள்ளது. மாடுகள் எப்படி அதன் எஜமானருக்கு கட்டுபட்டு கடினமாக உழைக்கிறதோ, அதேபோல் தான் ரிஷப ராசிக்காரர்களும் கடின உழைப்பாளிகளாக விசுவாசம் கொண்டு இருப்பார்கள். மாடு தன் வேலை உண்டு தான் உண்டு என்று இருப்பது போல் இந்த ராசிக்காரர்களும் தங்களின் வேலையில் குறியாக இருப்பார்கள். புதிய விஷயங்களில் இவர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் இருப்பதில்லை.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

ரிஷப ராசிக்காரர்கள் வெற்றி மேல் வெற்றி பெற கிருத்திகை 2 3 4 பாதங்கள் உள்ளவர்களும் புதன்கிழமையில் லேசான நிறம் கொண்டஉடை அணிந்து வெங்கடாஜலபதியை சேவித்து வந்தால் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும்.

இவர்கள் தங்கத்தில் கோமேதகம் பதித்த மோதிரம் அணிய அவர்களுக்கு அதிர்ஷ்டம் நிலைக்கும். இவர்கள் பச்சை சிவப்பு நிறம் கலந்த வர்ணம் ஆகிய உடை அணிந்து வெள்ளிக் கிழமைகளில் ஸ்ரீ மகாலட்சுமியை வழிபட்டால் செல்வம் பெருகி வாழ்வு நிம்மதி பெறும்.

இவர்களுக்கு இதயநோய் மலச்சிக்கல் இரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் பலிக்க அனைத்து வகையான கனி வகைகள் எடுத்துக்கொள்ள நலம் பெறும். ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வீடு விற்பனைக்கு வரக்கூடிய துன்பங்களிலிருந்து விடுபட



இடத்தில் இருந்து விடுபட மன உளைச்சலில் இருந்து விடு பட இவர்கள் ரோஸ் உடை அணிந்து சர்கிங் வைரம் வெள்ளி காப்பு என அணிந்துவந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

திங்கள் கிழமையில் குரு ஓரையில் பகவான் சிவனை வழிபட்டால் துன்பங்கள் நீங்கி இன்பத்தை அனுபவிப்பார்கள். திருமணத்தடை விலகும், பூர்வீக சொத்துப், பிரச்சனைகள் தீரும் வீடு விற்பனையாகாமல் சுகம் அளிக்கும், தொழில் லாபம் பெற்று நிம்மதியாக வாழ வழி வகுக்கும்.

மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்கள் நான்கு பாதங்களும் கொண்டவர்கள் ஆழ்ந்த பச்சை நீலம் பச்சை சிவப்பு கலந்த வர்ணங்களில் உடை அணிந்து வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ மகாலட்சுமியை வழிபட்டால் செல்வம்பெருகி லாபம் பெற்று பணவரவு சுகமளிக்கும்.

நிம்மதி கிடைக்கும் மேலும் இவர்கள் வெள்ளி மோதிரத்தில் மரகத பச்சை கல் அணிந்து அணிந்து வந்தால் இவர்களுக்கு அதிர்ஷ்டம் நிலைக்கும். இவர்களுக்கு இதயநோய், மலச் சிக்கல் இரத்த அழுத்தம் போன்ற பிரச்சனைகள் குறைய யோகாசனங்களையும் அதிக நீரும் பருகிவந்தால் சுகம் கிடைக்கும். இவர்களின நோய்கள் குணமடைய பால் கீரைகள் சாப்பிட உடம்பு சீராக இருக்கும். இவர்களின் அதிர்ஷ்ட எண் 6.

## எச்சரிக்கை பலன்கள்:

ரிஷப ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் வீட்டிற்கு 12லும், ஸ்ரீ கேது பகவான் 6ஆம் இடத்திற்கு வருவது மிகச்சிறப்பான பலன்களை தரும்.

எதிலும் வெற்றிமேல் வெற்றி ஏற்படும். எதிரிகள் தங்களிடம் தோல்வி அடைவார்கள், கடன் அடைபடும்,நோய்கள் கட்டுக்குள் இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். தொழிலில் வெற்றி, காதலில் வெற்றி, திருமண யோகம்,

புதிய வேலைவாய்ப்பு, கல்வியில் மேன்மை, திடீர் அதிர்ஷ்டம், பாட்டனார் சொத்து, பெரியோர்களின் ஆசி கிடைக்கும். வெளிநாட்டு வியாபாரம், பயணம் கைகூடும். இருப்பினும் தங்களை ஏமாற்ற ஒரு சிலர் முயற்சிப்பார்கள். கவனத்துடன் இருந்தால் ஏமாற்றத்தை தவிர்க்க லாம். சிலருக்கு தூக்கமின்மை, கனவு தொல்லை இருக்கும்.







# மிதுன ராசிபலன்

மிதுன ராசிக்காரர்கள் தங்களின் குறியீடாக ஆண்பெண் இணைந்திருப்பது போன்ற உருவம் பெற்றிருக்கிறார்கள். இதனால் அவர்கள் மற்றவர்களிடம் மிகுந்த நட்பு பாராட்டுவார்கள். எனவே அவர்கள் பொதுவாகவே கலகலப்பானவர்கள்.

எதிர் பாலினத்தவரிடம் அதிக அன்பு கொண்டிருப்பார்கள். எப்போதும் எதையாவது பேசிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் கூட்டமாக இருப்பதை தான் விரும்புவார்கள். தனிமையை வெறுப்பார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

மிதுனம் ராசியின் பலன் திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் மஞ்சள் நீலம் போன்ற ஆடை அணியலாம் அவ்வாறு ஆடை அணிந்து சனிக்கிழமைகளில் சிவனை வழிபட்டால் சிவன் கோயிலில் உள்ள அம் பாளை நெய் தீபம் ஏற்றி வழிபாடு பண்ண அவர்களுக்கு மன உளைச்சல் குறையும்.

தாய்வழி சொத்துக்களில் உள்ள பிரச்ச னைகள் குறையும் கணவன் மனைவி நிம் மதியாக இருப்பார்கள் இவர் கள் தாமிரம் அணியலாம் வெள்ளி மோதி ரத்தில் நீலக்கல் வைத்து அணிய அதிர்ஷ்டம் நிலைக்கும்.

இவர்களுக்கு சிறு சிறு வைத்திய செல வுகள் வந்து கொண்டிருக்கும் பட்சத்தில்



பைத்தியங்கள் தீர இவர்கள் இஞ்சி பூண்டு தேன் பால் என அருந்தி சாப்பிட்டு வந்தால் உடல் வைத்தியம் ஆரோக் கியம் கூடும்.

புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் நான்கு பாதமும் சேர்ந்து அவர்கள் சிவப்பு கருஞ்சிவப்பு உடை அணிந்து வியாழக் கிழமைகளில் முருகன் துர்க்கையை வழிபாடு செய்தால் அதிர்ஷ்டம் நிலைக் கும்.

செல்லும் காரியம் வெற்றி பெறும் இவர்கள் தொழில் லாபம் வளர்ச்சியடையும் இவர்களுக்கு பவளம் அணிகலன்கள் தங்கத்தில் பதித்து அணிந்து கொண்டால் இவர்களின் அதிர்ஷ்டம் நிலைக்கும் வசீகரம் கூடும்.

இவர்களுக்கு உடல் எரிச்சல் போன்ற நோய்கள் இருந்தால் இவர்கள் நெய் பால் கீரைகள் நிறைய சாப்பிட இவர் களுக்கு வைத்திய சுகம் கிடைக்கும்.

## எச்சரிக்கை பலன்கள்:

மிதுன ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ராசிக்கு லாப ஸ்தானம் எனும் 11லும், ஸ்ரீ கேது பகவான் புத்திர ஸ்தானம் எனும் 5ஆம் இடத்திற்கும் வருவது மிகச்சிறப்பான பலன்களை தரும். இதுவரை இருந்த இன்னல்கள் நீங்கும்.

அஷ்ம சனிபகவானின் பாதிப்புகள் குறையும். தொழிலில் வெற்றி, காதலில் வெற்றி, திருமண யோகம், வேலைவாய்ப்பு, உத்தியோகத்தில் உயர்வு, சம்பள உயர்வு போன்றவை ஏற்படும்.

அரசியல்வாதிகளுக்கு மிகுந்த நன்மைகளை ராகு வாரிவழங்குவார். கல்வியில் மேன்மை, திடீர் அதிர்ஷ்டம், பாட்டனார் சொத்து, பெரியோர்களின் ஆசி கிடைக்கும். கடன் அடைபடும், நோய்கள் கட்டுக்குள் இருக்கும். இருப்பினும் குழந்தைகள் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை.







# கடக ராசிபலன்

கடக ராசிக்காரர்கள் நண்டை குறியீடாக கொண்டவர்கள். நண்டிடம் மிகவும் எச்சரிக்கை குணமிருக்கும். அதேபோல் தான் கடக ராசிக்காரர்கள் எளிதில் யாரையும் நம்பி விடுவதில்லை. நண்டு தன் குஞ்சுகளை அடை காப்பது போல் கடக ராசிக்காரர்களும் குடும்பத்தின் மீது அதிக பற்று கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் மிகவும் கனிவானவர்கள் மற்றும் பாசக்காரர்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

கடக ராசிக்காரர்கள் வெற்றி மேல் வெற்றி பெற புதிய தொழில் துவங்க சிறு சிறு துன்பங்களிலிருந்து விடுபட கடக ராசியில் பூசம் நட்சத்திர காரர்கள் மஞ்சள் வெளிர் சிவப்பு உடை அணிந்து ஞாயிற்றுக்கிழமைகளில் சிவன் கோவில் சென்று நவக்கிரக வழிபாடு செய்து செய்தால் அவர்களுக்கு தடை விலகும்.

வெற்றி மேல் வெற்றி வரும் இவர்கள் அதிர்ஷ்டமான தங்கம் தாமிரம் ஆகிய உலோகங்களில் மஞ்சள் வைரம் கனக புஷ்பராகம் கல் அணிய அதிர்ஷ்டம்



நிலைக்கும் இவர்களுக்கு சிறுசிறு உடம்பு தொல்லைகள் இருந்தால் ஆரஞ்சு பேரிச்சம்பழம் போன்ற உணவுகள் எடுத்துக் கொண்டால் உடல் வைத்தியம் பலிக்கும்.

இவர்கள் யோகாசனங்களை கடைபிடிக்க நல்லது. இவர்களின் அதிர்ஷ்ட எண் 1. ஆயில்யம் நட்சத்திர காரர்கள் வெள்ளை வெளிர் பச்சை உடை அணிந்து திங்கள் கிழமைகளில் அம்மன் கோவில் சென்று வழிபட்டால் காரியத்தடை நீங்கும்.

இவர்கள் தங்க மோதிரம் அணிய இவர்களுக்கு அதிர்ஷ்டம் நிலைக்கும் வைரம் அணிய மேலும் மேலும் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே போகும் இவர்கள் குடல் புண் கட்டிகள் சிறுநீர்ப்பை பிரச்சனைகள் இருந்தால் நிறைய கனி வகைகளை சாப்பிட உடல் ஆரோக்கியம் பெருகும்.

மேலும் வடமேற்கில் நல்ல செய்திகள் வந்துசேரும் இவர்களுக்கு அதிர்ஷ்ட எண் 7

## எச்சரிக்கை பலன்கள்:

கடக ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ராசிக்கு தொழில் ஸ்தானம் எனும் 10லும், ஸ்ரீ கேது பகவான் சுகஸ்தானம் எனும் 4ஆம் இடத்திற்கும் வருவது சாதகமற்ற சூழ்நிலை இருக்கும். பல தடைகளையும், செலவுகளையும் தரும்.

முக்கியமாக தொழிலில் தடை, வேலை செய்யும் இடத்தில் பிரச்சனை, அதிகபடியான உழைப்பு, உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காதது,

உடல் மற்றும் மன சோர்வு, தூக்கமின்மை, வீடு வாகனத்தல் செலவு ஏற்படும். அரசியலில் உள்ளவர்களுக்கு பின்னடைவு ஏற்படும்.

பெண்களுக்கு கற்பப்பை பிரச்சனை, மாமனார் மாமியாருடன் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது. மாணவர்களை பொருத்தவரை கல்வியில் மந்தநிலை இருக்கும். கடினமாக உழைத்தால் மட்டுமே தேர்வில் வெற்றி பெற முடியும். கண்டக சனிபகாவானின் பார்வையில் நீங்கள் இருப்பதை மறவாதீர்... எனவே எதிலும் கவனம் தேவை.

தாயாரின் உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவை







# சிம்ம ராசிபலன்

சிம்ம ராசியினர் சிங்கத்தை குறியீடாக கொண்டிருப்பதால் சிங்கத்தின் குணாதிசயங்களை இவர்கள் பெற்றிருப்பார்கள். சிங்கம் எப்பொழுதும் எதை பற்றிய சிந்தனையும் இல்லாமல் உறங்கிக் கொண்டிருக்கும். அதேபோல் தான் சிம்ம ராசிக்காரர்களும் எதையும் அதிகம் போட்டு அலட்டிக்கொள்ளாமல் நிம்மதியாக இருப்பார்கள். பிறகு வருவதை பிறகு பார்த்துக் கொள்வோம் என்று அலட்சியமாக இருப்பார்கள். காட்டிற்கு ராஜா சிங்கம் என்பதுபோல் சிம்ம ராசிக்காரர்கள் தலைமை பண்பை விரும்புவார்கள். பசித்தால் மட்டுமே வேட்டையாடும் திறன் கொண்டிருப்பதால் தேவையற்ற விஷயங்களை இவர்கள் செய்ய மாட்டார்கள். தன் எல்லைக்குள் சிங்கம் யாரையும் அனுமதிக்காது. அதே போல் தான் இவர்களும் தங்களின் சுதந்திரத்தை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்




சிம்மம் ராசிக்காரர்கள் தந்தைவழி பகை விலக கணவன்மனைவி சுகமாக இருக்க புத்திர பாக்கியங்கள் பெற்று சுகமாக வாழ மகம் நட்சத்திரகாரர்கள் வெளிர் மஞ்சள் ஆடை அணிந்து அல்லது ரோஸ் கலர் ஆடை அணிந்து வியாழக்கிழமையில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் விரயங்கள் குறைந்து லாபங்கள் அதிகரிக்கும்.

மேலும் அதிர்ஷ்டமாக வாழ தங்கம் உப யோகித் தால் தங்கத்தில் செவ்வந்திக்கல் பதித்து அதை அணிந்து சென்றால் அதிர்ஷ் டம் நிலைக்கும் இவர்களுக்கு தோல் வியாதி நரம்புத்தளர்ச்சி போன்ற நோய் குறைய மாதுளை அன்னாசி எலுமிச்சை பழம்என பருகிவந்தால் உடல் ஆரோக் கியம் பெருகும்.

இவர்களின் அதிர்ஷ்ட எண் 3 மேலும் சிம்மத்தில் பூரம் நட்சத்திரக்காரர்கள்

வெளிர் நீல கோடுகள் போட்ட ஆடை அணியலாம் அப்படி அணிந்து ஞாயிற்றுக்கிழமையில் ஸ்ரீகணபதி துர்க்கையை வழிபட்டால் குடும்ப உறவு சிறப்பாக அமையும் தாமிரம் வெள்ளி ஆகிய உலோகங்கள் அணிய அதிர்ஷ்டம் நிலைக்கும்.

அதில் கோமேதகம் கல் பயன் படுத்தி அணிந்து வந்தாள் இவர்க ளுக்கு அதிர்ஷ்டம் நிலைத்து மேலும் மேலும் வெற்றிகள் குவியும் யோகாசனம் செய்ய மனம் அமைதிபெறும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 1.

உத்திரம் ஒன்னும் கன்னியில்மூன்று பாதம் கொண்ட உத்திர நட்சத்திரக்காரர்கள் லேசான வர்ணம் உள்ள ஆடை அணிந்து புதன்கிழமைகளில் பகவான் வெங்கடாஜல பதியை சேவித்து வந்தால் பிரச்சனைகள் தீரும்.

எதிர்பார்த்த காரியங்கள் வெற்றி பெறும் இவர்கள் தங்கத்தில் வைரம் அணிந்து வந்தால் அதிர்ஷ்டம் நிலைக்கும் சுகமாக வாழ்வுக்கு வழிவகுக்கும் இவர்களுக்கு நரம்பு பலவீனம் சோர்வு போன்ற தொல்லைகள் இருக்கும் பட்சத்தில் பாதாம் நெய் பால் என எல்லா வகையிலும் சாப்பிட இவர்களுக்கு உடல் வியாதி சுகமாகும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 5.

## எச்சரிக்கை பலன்கள்:

சிம்ம ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானம் எனும் 9லும், ஸ்ரீ கேது பகவான் தைரிய வீரிய ஸ்தானம் எனும் 3ஆம் இடத்திற்கும் வருவது நற்பலன்களை தரும்.

தைரியத்தாலும் அயராத முயற்சியினாலும் பல அரிய காரியங்களில் வெற்றி பெறுவீர். தொழிலில் வெற்றி, புதிய தொழில், வேலை வாய்ப்பு, அதிகாரிகளின் ஆதரவு, விரும்பும் இடத்திற்கு இடமாற்றம், சம்பள உயர்வு, வேலை ஆட்களினால் நன்மை, அரசியலில் வெற்றி,




புதிய பதவி, அரசாங்கத்தால் ஆதாயம் செல்வ சேர்க்கை, வீடு வாகன சேர்க்கை போன்ற பல நற்பலன்கள் கிடைக்கும். இருப்பினும் இளைய சகோதரரால் பிரச்சனையும், தந்தைக்கு உடல்நிலை பாதிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது. மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பெண்களுக்கு கணவன் மற்றும் புகுந்த வீட்டாருடன் நல்ல உறவு மேம்படும்.





# கன்னி ராசிபலன்

கன்னி ராசிக்காரர்கள் கன்னிப் பெண்
உருவம் குறியீடாக கொண்டிருப்பதால் தங்களை
எப்போதும் கவர்ச்சியாகவும், இளமையாகவும்
வைத்துக் கொள்வார்கள்.
இவர்கள் எப்போதும் தங்களைச் சுற்றி மகிழ்ச்சி
நிறைந்து இருக்க வேண்டும் என்பதை
அதிகம் விரும்புவார்கள். எவ்வளவு பெரியவர்களாக
இருந்தாலும் சிறுபிள்ளை போல்
நடந்து கொள்வார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

கன்னி ராசிக்காரர்கள் அஸ்தம் நட்சத்திரக்காரர்கள் ஆழ்ந்த நீலம் ஆழ்ந்த பச்சை உடை அணிந்து வெள்ளிக்கிழமையில் ஸ்ரீமகாலட்சுமி வணங்கி வந்தால் அமைதி கிடைக்கும்.

நல்ல செய்திகள் வந்து சேரும் பண வரவு செலவுகள் திருப்தியாக இருக்கும். இவர்கள் வெள்ளியில் மரகத பச்சை கல் வைத்து அணிய அதிர்ஷ்டம் நிலைத்து நிற்கும் அதிர்ஷ்டம் பெருகும் இவர்கள் சிறு சிறு வைத்தியங்கள் உடம்பில் இருக்கும் பட்சத்தில் திராட்சை தேன் கீரை பால் என சாப்பிட உடல் ஆரோக்கியம் வளரும்.

இவர்களின் அதிர்ஷ்ட எண் 6. சித்திரை



நட்சத்திரக்காரர்கள் மஞ்சள் உடை அணிந்து வியாழக்கிழமையில் ஸ்ரீ கணபதி ஸ்ரீ மஹாலட்சுமி ஸ்ரீ சரஸ் வதி ஸ்ரீ சண்முகர் முருகன் ஆகிய தெய்வங்களை வணங்கி வந்தால் அதிர்ஷ்டம் நிலைக்கும்.

சுகம் கூடும் மேலும் தங்கம் வைடூரியம் முத்து சந்திரகாந்தன் போன்ற கல் பதித்து அணிந்து வந்தால் அதிர்ஷ்டம் நிலைக்கும் போகும் இடமெல்லாம் வெற்றி பெறும் மேலும் உணவு ஒவ்வாமை வாயுத்தொல்லை வியர்வை சம்பந்தப்பட்ட கட்டிகள் இருந்தால் நீர் நிறைந்த காய் கறிகளும் பழங்களும் சாப்பிட உடல் வைத்தியம் பறிக் கும் ஆரோக்கியம் கூடும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 2.

## எச்சரிக்கை பலன்கள்:

கன்னி ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானம் எனும் 8லும், ஸ்ரீ கேது பகவான் குடும்ப ஸ்தானம் எனும் 2ஆம் இடத்திற்கும் வருவது தீயபலன்களை தரும். முக்கியமாக பெண்களுக்கு அதிக தீயபலன்களை தரும்.

எதிலும் பொருமை, நிதானம், நாவடக்கம் தேவை. நாவை அடக்காவிட்டால் குடும்ப பிரச்சனை முதல் அனைத்து விஷயங்களிலும் பிரச்சனைகள் ஏற்படும். முக்கியமாக பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானத்தில் ராகு இருப்பதால் கணவன் மனைவி கருத்து வேறுபாடு ஏற்படும். கணவனின் உடல் நலம் குன்றும். குடும்பத்தில்

குழப்பம், மாமனார் மாமியாருடன் சதாசண்டை ஏற்படலாம். சிலருக்கு தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் கூட தோன்றலாம்...

இதிலிருந்து விடுபட அவசியம் இறைவழிபாடு தொடர்ச்சியாக தேவை. எல்லோரிடம் அனுசரித்து போங்கள்... முடியாவிட்டால் அமைதியாக இருங்கள். எதுவும் நிரந்தரம் இல்லை... என்ற மனப்பக்குவத்தை உருவாக்கி கொள்ளுங்கள்...







# துலா ராசிபலன்

துலாம் ராசிக்காரர்கள் நீதி தேவதையின் கைகளில் இருக்கும் தராசை குறியீடாக கொண்டிருப்பார்கள். இதனால் தராசை போல் எந்த ஒரு விஷயத்திலும் ஏற்ற இறக்கம் இல்லாமல் நடுநிலையாக நடந்து கொள்வார்கள். இவர்களுக்கு நியாயம் மிகவும் முக்கியமாக இருக்க வேண்டும். அநியாயம் செய்பவர்களை பார்த்தால் இவர்களுக்கு சுத்தமாக பிடிக்காது. வியாபார தந்திரங்களை இயற்கையாகவே இவர்கள் கொண்டிருப்பார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்




துலாம் ராசிக்காரர்கள் சுவாதி நட்சத்திர காரர்கள் பச்சை நீலம் ஆடை அணிந்து சனிக் கிழமையில் சிவன் சீனிவாச பெருமாளையும் சிவனையும் வணங்க மலர்களால் அர்ச்சனைகள் செய்ய தடைகள் விலகும்.

பிரச்சனைகள் தீரும் மேலும் அதிர்ஷ்டமாக இருக்க வியாபாரம் பெருக வெள்ளியில் நீலக்கல் பதித்து அணிய அதிர்ஷ்டம் நிலைக்கும் வைத்தியம் தீர மூட்டு வலி மஞ் சள் காமாலை போன்ற நோய்கள் தீர இஞ்சி வேப்பம்பூ சுண்டைக்காய் மணத்தக்காளி என சாப்பிட்டு வர நோய் குணமாகும்.

இவர்களுக்கு அதிர்ஷ்ட எண் 1.

விசாகம் நட்சத்திரக்காரர்கள் கருஞ்சிவப்பு நீலம் நிற ஆடை அணிந்து செவ்வாய்க்

கிழமையில் வெள்ளிக்கிழமையில் துர்க்கை ஹனுமான் போன்ற தெய்வங்களை வழிபட்டால் சுகம் கூடும்.

தடைகள் விலகும் மேலும் அதிர்ஷ்டமாக இருக்க தங்கத்தில் பவளம் பதித்து அணிய அதிர்ஷ்டம் பெருகும் நோய்கள் தீர வெங்காயம் பூண்டு இஞ்சி என கனிவகைகள் எல்லாம் எடுத்துக் கொள்ள வைத்தியம் பறிக்கும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 5.

## எச்சரிக்கை பலன்கள்:

துலாம் ராசி அன்பர்களே, ராகு பகவான் உங்களின் ராசிக்கு 7ஆம் இடமான கணவன் மனைவி ஸ்தானத்திற்கும், கேது பகவான் ஜென்ம ராசிக்கும் வருகிறார்கள். இக்கிரக பெயர்ச்சியானது சுருக்கமாக சொன்னால் மிக மேசமான பலன்களை தங்களுக்கு தர உள்ளது.

ஏற்கனவே தாங்கள் அர்த்தாஷ்டம சனிபகவானின் பார்வையிலும் இருப்பதால் மேலும் இன்னல்களை அதிகரிக்கும். தங்களின் கர்ம பலன்களை அனுபவிக்கும் நேரமிது.

இப்பிறப்பில் இதுவரை தாங்கள் தீமை செய்திருந்தால் அவை வட்டியும் முதலுமாக தங்களுக்கே வரும். குடும்பத்தில் குழப்பம், மன அமைதி இன்மை, கணவன் மனைவி பிரிவு, கூட்டு தொழிலில் நஷ்டம், கடன், நோய்நொடி, போன்றவை ஏற்படும். திருமணத்தடை, காதலில் தோல்வி, கெட்ட பெயர், நல்லவர்கள் மற்றும் பெரியோர்களின் சாபம், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் துரோகம், வாகன கெண்டம், வழக்கில் தோல்வி, பூர்வீக சொத்து இழப்பு என அனைத்து விதமான தீய பலன்களும் வர வாய்ப்புள்ளது.







# விருச்சக ராசிபலன்

விருச்சிக ராசிக்காரர்கள் தேள் உருவத்தை தன் குறியீடாக கொண்டிருப்பதால் தேள் எப்படி மறைந்திருப்பதை விரும்புகிறதோ அதேபோல் இந்த ராசிக்காரர்களும் வெளிப்படையாக இருக்க மாட்டார்கள். எதையும் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களைப் புரிந்து கொள்வதற்கு தனியாக நாம் கோர்ஸ் தான் எடுக்க வேண்டும். பெண் தேள் குஞ்சு பொரித்தால் இறந்துவிடும். அதுபோல் நீங்களும் மற்றவர்களுக்காக எந்த தியாகத்தையும் செய்ய தயங்குவதில்லை. இவர்கள் யாரோடும் எளிதில் ஒன்றி விடுவதில்லை. அதேபோல்தான் தேளும் மற்றொரு தேளுடன் வசிப்பதில்லை.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

விருச்சகம் ராசி காரர்கள் அனுஷம் நட்சத்திரக்காரர்கள் வெளிர் நீல ஆடை அணிந்து வெளிர் சிகப்பு ஆடை அணிந்து ஞாயிற்றுக்கிழமையில் சிவனை வழி பட்டால் தியானம் செய்து வந்தால் நம் பிரச்சனைகள் தீரும் வெற்றி மேல் வெற்றி கூடும்.

மேலும் தங்கத்தில் மாணிக்கக்கல் பதித்து கனக புஷ்பராகம் கல் பதித்து அணிந்தால் அதிஷ்டம் நிலைக்கும் இவர்களின் நோய் தீர உடம்பு சுகமாக இருக்க தேனும் பாலும் பருகிவந்தால் பாலில் குங்குமப்பூ சேர்த்து தின மும் பருகி வர உன் வைத்தியம்



பறிக்கும்.

இவர்களுக்கு அதிர்ஷ்ட எண் 1.

விருச்சக ராசியில் கேட்டை நட்சத்திரக்காரர்கள் வெள்ளை வெளிர் மஞ்சள் ஆடை அணிந்து ஸ்ரீ அம்மனை வழிபட்டால் பிரச்சனைகள் தீரும் அதிர்ஷ்டம் நிலைக்கும் இவர்களுக்கு திருமண தடை இருந்தால் விலகும் மறுமணம் நடக்கும் நினைத்தால் தடை விலகி மறுமணம் நடக்கும்.

இவர்களில் பிரச்சனைகள் தீர வெள்ளி தங்கம் தாமிரத்தால் ஆன உலோகங்களில் முத்து பச்சை நிறக்கல் பதித்து அணிந்தால் அதிஷ்டம் கிடைக்கும் வடமேற்கில் நல்ல செய்திகள் வந்து சேரும்.

இவர்களுக்கு நீரிழிவு கல்லீரல் போன்ற நோய் இருந்தால் இனிப்பை குறைத்து அடிக்கடி நீர் குடித்து வர முட்டைகோஸ் வெள்ளரி கீரைகள் சாப்பிட வைத்தியம் பலிக்கும் சுகமாக இருக்க வழி வகுக்கும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 7.

## எச்சரிக்கை பலன்கள்:

விருச்சிக ராசி அன்பர்களே, ராகு பகவான் தங்களின்ராசிக்கு 6ஆம் இடத்திற்கும், கேது பகவான் 12ஆம் இடத்திற்கும் வருகிறார்கள். இவ்விரு கிரகங்களின் சஞ்சாரமானது மிகவும் அற்புதமான பல நன்மைகளை தரும் விதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்வில் பல வெற்றிகளை குவிக்கும் நேரமிது.

ஏற்கனவே தைரிய ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான்

ராகு கேது பகவான்களை ஊக்குவித்து பல வெற்றிகளை வாரி வழங்க இருக்கிறார். முயற்சிகள் வெற்றி அடையும். பகைவர்கள் காணாமல் போவார்கள். வழக்கில் வெற்றி, போட்டி பந்தயங்களில் வெற்றி, தேர்வில் வெற்றி என வாழ்வில் பல வெற்றிகளை குவித்து இலட்சியத்தை அடையும் நேரமிது. தொழில் சிறப்பாக இருக்கும்.

திருமணம், புத்திரம், உயர் கல்வி, வேலை வாய்ப்பு என பல நற்பலன்களை பெறுவீர்கள். ஆணவத்தையும், தலைகணத்தையும் மட்டும் தள்ளி வைத்தால் நெம்பர் 1 நீங்கள் தான்...







# தனுசு ராசிபலன்

தனுசு ராசிக்காரர்கள் பாதி மனிதனும், மிருகமும் கலந்த உருவம் வில்லேந்தி குறி பார்ப்பதுபோல் குறியீட்டை கொண்டிருக்கிறார்கள். இதனால் இவர்களிடம் மனிதத் தன்மையும், மிருக தன்மையும் கலந்து இருக்கும். எனினும் மனிதனாக இருப்பதற்கு முயற்சி செய்வார்கள். வில்வித்தை தெரிந்தவனுக்கு மனம் ஒரு நிலையில் இருக்க வேண்டும். இதனால் தனுசு ராசிக்காரர்களுக்கு இயற்கையாகவே மன ஒருமைப்பாடு இருக்கும். எதையும் முன்கூட்டியே சிந்திக்கும் ஆற்றல் இருக்கும். ஒரே குறிக்கோளை லட்சியமாகக் கொண்டு பயணிப்பார்கள். வில்லேந்திய ராமன் போல் தர்மத்திற்காக போராடும் குணம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

தனுசு ராசிக்காரர்கள் மூலம் நட்சத்திரக் காரர்கள் ஆழ்ந்த ரோஸ் கலர் ஆடை அணிந்து வியாழக்கிழமையில் ஸ்ரீ தட்சிணா மூர்த்தியை வழிபட்டால் அவர்களுக்கு புத்திரபாக்கியம் பிரச்சனை தீரும் மேலும் தங்கத்தில் செவ்வந்திக்கல் பதித்து அணிந் தால் அதிஷ்டம் கிடைக்கும்.

தங்க காப்பு அணிய சுகம் கூடும் அதிர்ஷ் டம் பெருகும் நரம்பு தளர்ச்சி தீர கோதுமை நெல்லிக் கனி மாதுளை என்ன சாப்பிட உடம்பு பலம் பெறும்.

இவர்களின் அதிர்ஷ்ட எண்3. பூராடம் நட்சத்திரகாரர்கள் வெளிர் நீல கோடுகள் போட்ட ஆடை அணிந்து மஞ்சளாடை அணிந்து ஞாயிற்றுக்கிழமை யில் ஸ்ரீ கண



பதி துர்க்கை ஹனுமான் போன்ற தெய்வங்களை வழிபாடு செய்ய பிரச்சனைகள் தீரும்.

புத்திரபாக்கியம் கிடைக்கும் மேலும் அதிர்ஷ்டமாக இருக்க வெள்ளியில் கனக புஷ்பராகம் கல் பதித்து அணிந்தால் அதிஷ்டம் கிடைக்கும்.

இவர்கள் மனம் அமைதி பெற யோகாசனம் தியானம் செய்ய நலம் கூடும் திடமான உணவு இல்லாமல் இருப்பது நலம் தரும்.

இவர்களின் அதிர்ஷ்ட எண் 1. உத்திராடம் நட்சத்திரக்காரர்கள் அதிர்ஷ்டம் நிலைக்க சுகம் கூட வைத்தியம் பறிக்க லேசான வர்ண ஆடை அணிந்து புதன்கிழமை களில் ஸ்ரீகிருஷ்ண பகவானை வழிபட்டால் பிரச்சனைகள் தீரும் சுகம் கூடும்.

தொழில் லாபம் பெறும் வீட்டில் பித்தளை உறங்குவது நல்லது தங்கத்தில் வைரம் பதித்த அணிகலன்களை அணிந்து வர அதிர்ஷ்டம் நிலைக்கும் இவர்களுக்கு வைத்தியம் பறிக்க பாதாம் பிஸ்தா நெய் உணவில் சேர்த்துக் கொள்ள உடல் பலம் பெறும் வைத்தியம் பறிக்கும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 5.

## எச்சரிக்கை பலன்கள்:

தனுசு ராசி அன்பர்களே, ராகு பகவான் தங்களின் ராசிக்கு 5ஆம் இடத்திற்கும், கேது பகவான் 11ஆம் இடத்திற்கும் வருகிறார்கள். இந்த சஞ்சாரமானது நன்மை தீமை கலந்த சம பலன்களையே தங்களுக்கு தரும். எனினும் இன்னும் தாங்கள் ஏழரை ஆண்டு சனிபகவானின் பிடியில் இருப்பதை மறவாதீர்.

புத்திர ஸ்தானத்தில் இருக்கும் ராகு பகவானால் குழந்தைகள் வகையில் செலவுகள், பிரச்சனைகள் ஏற்படும். உடலில், மனதில் சோர்வு, டென்ஷன் பொன்றவையுடன் பணத்தட்டுப்பாடு, தொழிலில் மந்தம் என பல வகையில் மந்த நிலை இருக்கும். தாய் மாமன் வகையில் பிரச்சனை, காதலில் தோல்வி, மாணவர் களுக்கு கல்வியில் மந்த நிலை, பெண்க ளுக்கு கற்ப பையில் பிரச்சனை, புத்திர தடை ஏற்படும்.

இருப்பினும் தீர்த்த யாத்திரை செல்லுதல், தெய்வ தரிசனம் போன்ற நற்பலன்களும் கிடைக்கும்.







# மகர ராசிபலன்

மகர ராசிக்காரர்கள் முதலையை தங்கள் குறியீடாக கொண்டிருப்பதால் முதலை போல் ஒரே இடத்தில் இருந்து கொண்டு தங்களது காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். பாசாங்கு செய்வதில் முதலையைப் போல் இருப்பீர்கள். முதலை அமைதியாக இருப்பது போல் தோன்றினாலும் தன்னைச் சுற்றி நடப்பவைகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கும் அது போல் தான் இந்த மகர ராசிக்காரர்களும் இருப்பார்கள். வாய்ப்புகளுக்காக காத்துக் கொண்டிருக்கும் நீங்கள் வாய்ப்பு கிடைத்தால் சட்டென பிடித்துக் கொள்வீர்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

மகரம் ராசிக்காரர்கள் திருவோண நட்சத்திர காரர்கள் பச்சை சிகப்பு உடை அணிந்து புதன்கிழமையில் ஸ்ரீ வெங்கடாஜலபதி ஸ்ரீ அம்மனை வழிபட்டு வந்தால் லாபம் அதிகரிக்கும்.

தொழில் லாபம் வளரும் இவர்கள் தங்கத்தில் வெள்ளை வைரம் பதித்து அணிந்தால் அதிஷ்டம் கிடைக்கும்.

இவர்களுக்கு வைத்தியம் பறிக்க நரம்பு பலவீனம் சோர்வு போக கீரை வகைகளை நிறைய எடுத்துக்கொள்ளலாம் உடல் திடமாகவும் இவர்களின் அதிர்ஷ்ட எண் 5. அவிட்டம் நட்சத்திர காரர்கள் சுகமடைய இவர்கள் ஆழ்ந்த பச்சை நீலம் கலந்த உடை



அணிந்து வெள்ளிக்கிழமையில் ஸ்ரீ மகாலட்சுமி வழிபாடு செய்ய குடும்ப பிரச்சனைகள் தீரும் மனம் நிம்மதி பெறும்.

மேலும் வெள்ளியில் மரகத பச்சை கல் அணிந்து வந்தாள் உபயோகிக்க உபயோகிக்க அதிர்ஷ்டம் நிலைக்கும் இவர்களின் நோய் தீர இதய நோய் தீர தர்பூசணி மாதுளை ஆப்பிள் திராட்சை போன்ற கனி வகைகளை எடுத்துக் கொள்ளலாம் இவர்களின் அதிர்ஷ்ட எண் 6.

## எச்சரிக்கை பலன்கள்:

மகர ராசி அன்பர்களே, ராகு பகவான் உங்களின் ராசிக்கு 4ஆம் இடமான உயர்கல்வி, வீடு வாகனத்தை குறிக்க கூடிய சுகஸ்தானத்திற்கும், கேது பகவான் 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கும் வருகிறார்கள். சுருக்கமாக சொன்னால் இவை படுமோசமான பலன்களை தர உள்ளது.




ஏற்கனவே ஏழரை ஆண்டு சனிபகவானின் ஜென்ம சனி காலத்தில் இருக்கும் தங்களுக்கு பலன்களை சொல்லித்தான்தெரிய வேண்டுமா.? பலன் களை சொல்லுவதற்கு எனக்கே சோர்வாக இருக்கிறது.

அனைத்திலும் சோதனை மேல் சோதனை வரும். வீடு வாகனம் கைவிட்டு போகலாம். மாணவர்களுக்கு கல்வியில் தடை,தோல்வி ஏற்படும். இளம்பெண்கள் காதல் வயப்படமல் இருந் தால் மானம் மிச்சமாகும். இருப்பினும் தெய்வ நம்பிக்கையும், எதிலும் பொருமையும் இருப்பின் இச்சோதனைகளை எல்லாம் கடந்து வருவீர்கள். பயம் வேண்டாம்.





# கும்ப ராசிபலன்

கும்ப ராசிக்காரர்கள் மனிதன் பானையை சுமந்து இருப்பது போல் குறியீடு கொண்டவர்கள். இதனால் சேமிப்பின் அடையாளமாக இருக்கும் பானை போல் பணத்தை சம்பாதிப்பதில் நாட்டம் கொண்டு இருப்பார்கள். பிறரிடம் பிரதிபலனை எதிர்பார்க்காமல் இவர்கள் பழகமாட்டார்கள். மற்றவர்களால் இவர்களுக்கு என்ன லாபம் என்று தான் பார்ப்பார்கள். பானை சுமப்பது போல், மற்றவர்களுக்கு அடிமையாக இருப்பதற்கும் தயங்கமாட்டார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

கும்பம் ராசிக்காரர்கள் சகோதரப் பிரச்சனை தீர திருமணத்தடை நீங்க தந்தைவழி சொத்துக்கள் வந்து சேர சுகமாக வாழ கும்ப ராசி கும்ப ராசி சதயம் நட்சத்திர காரர்கள் ஆழ்ந்த நீல உடை அணிந்து திங்கள் வெள்ளியில் ஸ்ரீ மகாலட்சுமியும் பெருமாளையும் வழிபட்டால் திருமணத் தடை விலகும்.

சகோதர பிரச்சனைகள் நீங்கி சுகமாக இருக்க வழி வகுக்கும் இவர்கள் தங்கத்தில் மரகத பச்சை கல் அணிந்து உபயோகப்படுத்தினால் அதிர்ஷ்டம் நிலைக்கும் குடும்ப பிரச்சனை தீரும் மேலும் வைத்தியம் பறிக்க அத்திப்பழம்



பேரீச்சம்பழம் எல்லா வகையான கீரைகளும் சாப்பிட உடல் ஆரோக்கியம் பெருகும்.

இவர்களின் அதிர்ஷ்ட எண் 1.

பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் நான்கு பாதங்களும் சுகமாக வாழ பிரச்சனைகள் தீர திருமணம் கூடிவர மஞ்சள் ரோஸ் உடை அணிந்து சனிக்கிழமையில் சிவனை வழிபட்டால் திருமண பாக்கியம் கூடி வரும்.

குடும்ப பிரச்சனை தீரும்.

மேலும் அதிர்ஷ்டமாக வாழ தாமிரம் வெள் ளியில் நீலக்கல் பதித்து அணிய அதிர்ஷ்டம் நிலைக்கும் இவர்களின் நோய் தீர இஞ்சி கீரை குடல்புண் தீர வேப்பம்பூ சுண்டைக்காய் புளிப் பில்லாத மோர் சாப்பிட உடல் சீராகும் அதிர்ஷ்ட எண் 1.

## எச்சரிக்கை பலன்கள்:

கும்ப ராசி அன்பர்களே, ராகு பகவான் உங்களின் ராசிக்கு 3ஆம் இடமான தைரிய ஸ்தானத்திற்கும், கேது பகவான் 9ஆம் இடமான தெய்வ அருளைத்தரும் பாக்கிய ஸ்தானத்திற்கும் வருவது மிகச்சிறப்பான நற்பலன்களை தரும். 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பொற்காலமாக அமையும்.

தொழிலில் வெற்றி, புதிய தொழில், வேலை வாய்ப்பு, அதிகாரிகளின் ஆதரவு, விரும்பும் இடத்திற்கு இடமாற்றம், சம்பள உயர்வு, வேலை ஆட்களினால் நன்மை, அரசியலில் வெற்றி, புதிய பதவி, அரசாங்கத்தால் ஆதாயம், செல்வ சேர்க்கை, வீடு வாகன சேர்க்கை போன்ற பல நற்பலன்கள் கிடைக்கும். முயற்சியினால்

பல அரிய காரியங்களில் வெற்றி பெறுவீர். தீர்த்த யாத்திரை செல்லுதல், தெய்வ தரிசனம் போன்ற நற்பலன்களும் கிடைக்கும். ஆன்மீகத்தால்

ஆன்மிக அன்பர்களால் ஆதாயம் கிடைக்கும். இருப்பினும் பூர்வீக சொத்தில் பிரச்சனையும், சகோதரரால் பிரச்சனையும் இருக்கும்., மாணவர்களுக்கு கல்வியில் இருந்த மந்தநிலை நீங்கும்.







# மீன ராசிபலன்

மீன ராசிக்காரர்களுக்கு இரட்டை மீன் இருப்பதால் மீனுடைய குணாதிசயங்கள் இவர்களுக்கு இருக்கும். மீன் எப்படி தன்னைச் சுற்றி சுத்தமாக வைத்திருக்க விரும்புமோ அதேபோல் தான் அவர்களும் தங்களைச் சுற்றி சுத்தமாக வைத்துக் கொள்வதை விரும்புவார்கள். மீனைப் போல எப்போதும் மகிழ்ச்சியாக துள்ளி விளையாடுவதை விரும்புவார்கள். எப்போதும் கூட்டமாக இருப்பது தான் மீனின் குணம். அதேபோல்தான் மீன ராசிக்காரர்களும் தனிமையை விட கூட்டம், கூட்டுக்குடும்பம் போன்றவற்றை விரும்புவார்கள்.

## ராகுகேது பெயர்ச்சி பலன்

மீனம் ராசிக்காரர்கள் ராகு கேது பெயர்ச்சி பேச்சாற்றல் பலம்பெற திறமையை வெளிப்படுத்த பிரச்சனைகளில் விடுபட்டு நிம்மதியாக வாழ உத்திரட்டாதியில் பிறந்தவர்கள் நீல நிற உடை அணிந்து கருஞ் சிவப்பு உடை அணிந்து செவ்வாய் வியாழன் வெள்ளியில் முருகன் துர்க்கை ஹனுமான் போன்ற தெய்வங்களை வழிபட்டால் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும்.

மேலும் தங்கத்தில் பவளக்கல் பதித்து அணிய அவர்களுக்கு நிலையான அதிர்ஷ்டம் கிடைக்கும் தெற்குப் பகுதியில் சொத்து வாங்க சுப செய்திகள் வந்து சேரும் உஷ்ண வியாதிகள் போக சிறிய வெங்காயம் பூண்டு மிளகு இஞ்சி கனிவகைகள்



அதிகமாக சாப்பிட நோய் குணமாகும்.

வாரந்தோறும் எண்ணை தேய்த்து குளிக்க சோர்வு நீங்கும் அதிர்ஷ்ட எண் 5. ரேவதி நட்சத்திரக்காரர்கள் கல்வியில் வெற்றி பெற புதுக் கட்டிடங்கள் கட்ட இடம் வாங்க போன்ற தடை விலக வெளிர் சிகப்பு உடை அணிந்து ஞாயிற்றுக்கிழமையில் சிவனை வழிபட்டால் தடைகள் விலகி வெற்றி பெறுவீர்கள்.

கல்வித் துறையில் சிறந்து விளங்குவீர்கள் தங்கத்தில் மாணிக்க கல் பதித்த கனகபுஷ்பராகம் அணிந்து அணிந்து வந்தால் அதிர்ஷ்டம் நிலைக்கும் மேலும் இதய நோய் தீர வியர்வை நோய் தீர நலம் பெற நீரும் தேனும் பாலும் பருகிவர பாலில் குங்குமப்பூ சேர்த்து அருந்த ஆரஞ்சு பேரிச்சம்பழம் சாப்பிட உடல் பலமாகும். நோய் குணமடையும்,

இவர்களின் அதிர்ஷ்ட எண் 1.

# எச்சரிக்கை பலன்கள்:

மீன ராசி அன்பர்களே, ஸ்ரீ ராகு பகவான் உங்கள் ராசிக்கு குடும்ப ஸ்தானம் எனும் 2ஆம் இடத்திற்கும், ஸ்ரீ கேது பகவான் அஷ்டம ஸ்தானம் எனும் 8ஆம் இடத்திற்கும் வருகிறார்கள். இவை நன்மை தீமை இருபலன்களை தருவதாக அமைந்துள்ளது. எனினும் கவலை வேண்டாம் ஸ்ரீ சனி பகவானின் ஆதரவால் தீமைகளை கடந்து வருவீர்கள்.

எதிலும் பொருமை, நிதானம், நாவடக்கம் தேவை. நாவை அடக்கா விட்டால் குடும்ப பிரச் சனை ஏற்படும். வீண் விவாதத்தை தவிர்த்தால் தீமைகள் குறையும். அமைதிதான் உங்களுக்கு ஆறுதலை தரும். வாக்கு தவறுதல், தனப்பற்றாக்குறை, தொழிலில் மந்தம், கல்வி யில் மந்தம், திருமண தடை என சாதகமற்ற பலன்களை பெறுவீர்கள். இருப்பினும் சிலருக்கு வெளிநாட்டிலிருந்தோ, மாற்று மதத்தினரிடமிருந்தோ,

குறுக்கு வழியிலோ பெரும் தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.



நமது இதழில்
நீங்களும்
பங்கு பெற
விரும்புகிறீர்களா?

# விருப்ப சந்தா

தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு
சந்தா செலுத்த விரும்புபவர்கள்
ரூ.10 முதல் தங்கள்
வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு உதவலாம்.



சந்தா அனுப்புபவர்கள்,
கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்
வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)